விலை: 90.00
பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 260 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 20 திங்கட்கிழமை (05.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## துருக்கியில் இருந்து
## கோதுமை மா இறக்குமதி

(கொழும்பு)

துருக்கியில் இருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்பட்டு இங்கு விநியோகம் செய்யப்பட்டவுடன் மாவின் விலை குறைக்கப்படலாம் என மொத்த இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



(11 ஆம் பக்கம் பார்க்க)

## விமல் தலைமையில் புதிய கூட்டணி



(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய சுயாதீனக் கட்சிகளின் ஒன்றியத்தினால், "மேலவை 11

## சஜித் அணியினருக்கு ஐ.தே.க அழைப்பு

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ உட்பட கட்சியில் இருந்து வெளியேறியோர் மீண்டும் தாய்வீடு திரும்பலாம். அதற்கு எவ்வித தடையும் இல்லை என ஐ.தே.க. வின் சிரேஷ்ட உறுப்பினரும் ஜனா 11

## லிட்ரோ எரிவாயு விலைகள் இன்று குறையும்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# கோட்டாவுக்கு சுதந்திரம்
# போராடியவர்களுக்கு சிறைவாசம்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்

(கொழும்பு)

போராட்டக்காரர்களால் விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்பி வீட்டுக்குள் இருக்கின்றார். ஆனால், போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது அரசு வன்முறையைப் பிரயோகித்து அவர்கள் மீது அடக்குமுறைகளை மேற்கொண்டு அவர்களைச் சிறைச்சாலைகளுக்குள் அடைத்து வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பி கோட்டாவை சந்தித்தார் மகிந்த

(கொழும்பு)

நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ 11

## வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர்
### இன்று ஜெனிவா பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழு இன்று திங்கட்கிழமை ஜெனிவா செல்லவுள்ளது.

இதில் வெளிவி வகார அமைச்சர் அலி சப்ரி, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் சட் 11

## பொருளாதார நெருக்கடியை தீர்க்க பாராளுமன்றின் பங்களிப்பு அவசியம்
### முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க பாராளுமன்றம் பங்களிப்பு வழங்க வேண்டுமென்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் சபாநாயகரும், நீதியான சமூகமொன்றுக்கான அமைப்பின் தலைவரு 11

### தொண்டைமானாறு ஆற்றில்
## அடியார்கள் நீராட பாதுகாப்பு வேலி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய ஆற்றங்கரையில் அடியவர்கள் பாதுகாப்பாக நீராட, நீராடும் பகுதியைச் சுற்றி இரும்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது என செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனவே அடியவர் 11

## சிற்றுண்டிகளின் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை அதரிகரிப்புக் காரணமாக சிற்றுணவகங்களில் சிற்றுணவுகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 11

## பதப்படுத்தப்பட்ட உணவின் விலைகளில் மாற்றம் இல்லை
### உணவக உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும் பதப்படுத்தப்பட்ட உணவின் விலைகளை குறைக்க முடியாது என உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நகரப் பகுதியில் பொருட்களின் விலை குறைவாக இருந்தாலும், நகருக்கு வெளியே உள்ளவர்களுக்கு குறித்த நன்மை கிடைப்ப 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியை

அமரர் **ஞானதாசன் நொய்லீன்**



ஜனனின் ஒளிவிளக்கே! பண்பின் சிகரமே!
பாசத்தின் இருப்பிடமாம் பண்பின் உறைவிடமாம்
நேசமுடன் எம்முடன் பழகி
எல்லோருடனும் அன்பு மழை பொழிந்து
எல்லா நாளும் எம்முடன் சிரித்துப் பழகிய நீர்
சொல்லாமல் பேசாமல் சென்றீர்
உம் குடும்பத்தின் துடிப்போடு நாமும்
நொந்து நெருட துடிக்கின்றோம்...

தோற்றம் 1965.11.11 மறைவு 2022.09.03

பிரிவால் துயருறும்:- ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்

(C-4857)

---

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

---

## Exclusive English Classes for Foreign Settlers

ஐரோப்பிய நாடுகளில் 12 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் நடாத்தப்படும்.

Personal classes sponsor மூலம் UK, Canada போன்ற நாடுகளில் வசிக்கவுள்ளவர்களுக்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டம். அந்நாடுகளில் பேசப்படும் Accent உள்ளிட்ட அனைத்து விடயங்களும் கற்பிக்கப்படும்.

(12605)

**077 340 9210, 074 307 5174**

---

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 06.08.2022 அன்று காலமான
எங்கள் அன்புத் தாயார்

அமரர் **திரவியநாதன் இரத்தினம்**

மலர்வு 1962.07.19 உதிர்வு 2022.08.06

அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் இன்று 05.09.2022 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டிகரணக் கிரியையிலும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

நாவலடி,
உடுப்பிட்டி.

(C-4854)

குடும்பத்தினர்
077 995 5541

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 06.08.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர் **சுப்பிரமணியம் பரமேஸ்வரி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.09.2022) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 15.08.1955 மறைவு 06.08.2022

அழைப்பவர்கள்:- குடும்பத்தினர்
107/1, காரைநகர் வீதி,
சோலைபுரம், கொட்டடி,
யாழ்ப்பாணம். 077 038 1532

(12674)

---

# வாழ்த்துகின்றோம்

இன்றைய தினம் நல்லூர் பிரதேச சபையின்
செயலாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்கும்

## திரு.யுகராஜா ஜெலீபன்




வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் செயலாளராக 01.01.2016 தொடக்கம் ஆறரை வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி இன்றைய தினம் நல்லூர் பிரதேச சபையின் செயலாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்கும் திரு.யுகராஜா ஜெலீபன் அவர்கள் மக்களோடு நேரடியாக தொடர்புபடுகின்ற உள்ளூராட்சி சபையின் சேவைகளை மென்மேலும் திறம்பட ஆற்றுவதற்கு வாழ்த்துவதுடன் வலி.கிழக்குப் பிரதேச சபையில் இதுவரை காலமும் ஆற்றிய சேவைகளுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளையும் இந்நன்நாளில் பதிவிடுகின்றோம்.

– என்றும் அன்புரிமையுடன் வாழ்த்துபவர்கள் –

2018.12.21ஆம் திகதி தங்களால் தங்கள் காலத்தில்
நிரந்தர நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள்
வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்.

(12666)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளில்

# கிழக்கு மாகாணம் முதலிடம்

# வடக்கு மாகாணம் மூன்றாமிடம்

(யாழ்ப்பாணம்)

**உயர்தர மாணவர்களுக்கான 2021 ஆம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகளில் கிழக்கு மாகாணம் முதல்நிலை பெற்றுள்ள துடன் வடக்கு மாகாணம் மூன்றாம் நிலையைப் பெற்றுள்ளது.**

உயர்தர மாணவர்களுக்கான 2021 ஆம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகின. அதில் பல்கலைக் கழகத்திற்கு தகுதி பெறத்தக்க வகையில் மாணவர்கள் சித்தி யடைந்த வீதம் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 9 மாகாணங்களில் கிழக்கு மாகாணத்தில் 66 வீத மாணவர்கள் சித்தி பெற்று முதலாம் இடத்தினையும் ஊவா மாகாணத்தில் 65.86 வீதமான மாணவர்கள் சித்தி பெற்று இரண்டாம் இடத்தினையும் வடமாகாணத்தில் 65.26 வீதமான மாணவர்கள் சித்தி பெற்று மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளன.

மேலும் வடமேல் மாகாணம் 64.07 வீதம், மத்திய மாகாணம் 63.84 வீதம், மேல் மாகாணம் 63.31 வீதம், சப்பிரகமுவ மாகாணம் 62.84 வீதம், தென் மாகாணம் 62.11 வீதம், வட மத்திய மாகாணம் 60.10 வீதத்தையும் முறையே பெற்றுள்ளன.

கொவிட் அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பன காரணமாக பாடசாலைகளுக்கு அடிக்கடி விடுமுறை வழங்கப்பட்ட நிலையில் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணம் கல்வியில் முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-250)

### 1000 மெ.தொன் அரிசியை வழங்கியது மியன்மார்



(கொழும்பு)

மியன்மார் இலங்கைக்கு 1000 மெற்றிக் தொன் அரிசியை நன்கொடையாக வழங்கியுள்ளதாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜே.எம்.பண்டார தெரிவித்துள்ளார்.

யாங்கூனில் உள்ள வர்த்தகத் துறைமுகத்தில் இந்த அரிசி நன்கொடையாக வழங்கப்பட்டதோடு இலங்கையுடன் நிலவும் நட்புறவையும் ஒத்துழைப்பையும் கருத்தில் கொண்டு இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## துவிச்சக்கரவண்டி திருட்டு இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு மூன்று இடங்களில் துவிச்சக்கர வண்டி திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம், யாழ்.போதனா மருத்துவமனை மற்றும் குருநகர் சின்னக்கடை சந்தை பகுதி ஆகிய மூன்று இடங்களிலும் அண்மைய நாட்களில் துவிச்சக்கரவண்டிகள் திருட்டு போயிருந்தன.

ஒருவர் மாத்திரமே தனது துவிச்சக்கரவண்டி களவாடப்பட்டது என யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அவரின் முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கர வண்டிகளை களவாடிய பின்னர் ஊர்காவற்துறை நாரந்தனை பகுதியில் தலைமறைவாகும் இருவர் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்று, அங்கு விரைந்த புலனாய்வு பிரிவினர் 37 மற்றும் 38 வயதுடைய இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்கள் இருவரும் யாழில் திருடிய 3 துவிச்சக்கரவண்டிகளை மீட்டனர்.

கைது செய்த இருவரையும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட மூன்று துவிச்சக்கரவண்டிகளையும் ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-33-104)

## IMF இன் முதல் கடன் டிசெம்பரில் கிடைக்கும்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் ஊழியர் மட்ட உடன்படிக்கை செய்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் முதல் நிதி உதவியை இலங்கை அரசாங்கம் பெறும் என உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட 3 பில்லியன் டொலர் நிதி உதவியை இலங்கை கோரியுள்ளது. ஆனால் சர்வதேச நாணய நிதியம் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் வழங்க இணக்கம் வெளியிட்டுள்ளது.

டிசெம்பரில் பெறப்படும் முதல் கடன் தவணை சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று கூறப்படுகிறது. (4)

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இன்று கைலாசவாகன உற்சவம்

(குப்பிழான்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்.தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கைலாச வாகன உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் சிறப்பாக இடம்பெற உள்ளது.

இதேவேளை இன்று பிற்பகல் 1 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் நடைபெறும். (4-18)

## தொடரும் துப்பாக்கிச் சூடு மேலும் ஒருவர் பலி!

(கொழும்பு)

காலி, பிடிகல - தல்கஸ்வல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிடிகல - மியாகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நபர் உந்துருளியில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது, வீட்டின் அருகே அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பணத் தகராறு காரணமாக இந்நபர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (4)

## யூரியா உர விநியோகம் நிறைவடைந்துள்ளது

### விவசாய அமைச்சர்



(கொழும்பு)

சிறுபோக விவசாயத் தேவைக்காக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உர விநியோகம் நிறைவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி 29 ஆயிரத்து 740 மெற்றிக்தொன் யூரியா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறு போகத்திற்காக வட மத்திய மாகாணங்களில் அதிகளவான நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்தார். (4)

## ஆலய உண்டியல் திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் அமைந்துள்ள காளியம்மாள் கோயிலில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு உண்டியல் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோயில் நிர்வாகம் நெல்லியடி பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளது. (4-60)

## சந்நிதியில் தமிழக ஓதுவாரின் திருப்புகழ் இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி மஹோற்சவத்தை ஒட்டி இன்று 11 ஆம் திருவிழா தொடக்கம் தீர்த்தத் திருவிழா வரை தினமும் மாலை நான்கு மணிக்கும் இரவு சுவாமி திருவீதியுலா நிறைவிலும் திருப்புகழ் பாமாலை இசைநிகழ்வு நடை பெறவுள்ளது.

தமிழகம் பழநி ஆயை ஓதுவார் திருமுறை இசைச்செல்வர் வெ.விக்னேஷ் ஆறுமுகம் பக்கவாத்திய சகிதம் இந்த இசை நிகழ்ச்சியை வழங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (4-33)

## யாழ்.மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான அதிபரின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உயர்தர 2021 பிரிவில் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு 2022 ஆம் ஆண்டில் இரண்டாம் தடவையாக தோற்றும் மாணவர்களை இன்று திங்கட்கிழமை பகுதித் தலைவர்களை சந்திக்குமாறு கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# எறிபந்தாட்டப் போட்டி

### தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆதிக்கம்




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆதிக்கம் செலுத்தி 3 பிரிவு களில் சம்பியன் கிண்ணத்தையும், 17 வயதிற்குட்ப ட்ட ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

வடமாகாண பாடசாலை களுக்கிடையிலான ஆண் கள், பெண்களுக்கான எறி பந்தாட்டப் போட்டிகள் கடந்த 2 ஆம் திகதி கோப்பாய் கிறி ஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் 1ஆம் இடத்தை தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் பெற்றன.

20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் 1 ஆம் இடத்தை தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணி யும் இரண்டாமிடத்தை இள வாலை கன்னியர் மடம் மகா வித்தியாலய அணியும் மூன்றாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் பெற்றன.

17 வயதிற்குட்பட்ட ஆண் களுக்கான போட்டியில் 1 ஆம் இடத்தை கோட்டைகட்டிய குளம் மகா வித்தியாலய அணியும் இரண்டாமிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை கனகராயன்குளம் மகா வித்தியாலய அணியும் பெற் றன.

20 வயதிற்குட்பட்ட ஆண் களுக்கான போட்டியில் 1 ஆம்இடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் 2 ஆம் இடத்தை கோட்டை கட்டிய குளம் மகா வித்தி யாலய அணியும் மூன்றா மிடத்தை கனகராயன் குளம் மகா வித்தியாலய அணி யும் பெற்றன.

எறிபந்தாட்ட சிறந்த வீரர் களாக தெல்லிப்பழை யூனி யன் கல்லூரியைச் சேர் ந்த அபிவர்ணன், தாரணி ஆகியோர் தெரிவு செய்ய ப்பட்டனர். (4-90)

## மரண அறிவித்தல்

# கந்தையா சிவஞானம்

(ஓய்வுபெற்ற விமானப்படை இயந்திரவியலாளர்)
(Retired Flight Sergeant of Sri Lankan Air Force - 1984)



பிறப்பு :- 12.03.1938 இறப்பு:- 04.09.2022

42, தேன்தமிழ் வீதி, உவர்மலை, திருக் கோணமலையை சேர்ந்த கந்தையா சிவஞானம் (ஓய்வுபெற்ற விமானப்படை இயந்திரவியலாளர் - Retired Flight Sergeant of Sri Lankan Air Force - 1984) அவர்கள் நேற்று (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரோஜினிதேவி சிவஞானம் (சைவப்புலவர், இந்து தர்மாசிரியர், சைவ சித்தாந்த பண்டிதர், M.A சைவசித்தாந்தம், கலாபூசணம்) அவர்களின் பாசமிகு கணவரும் சுபதினி (உதவி அதிபர் - உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி), சதாநிதி (நிர்வாக உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கிண்ணியா), கஜேந்திரன் (தலைமைக் கணக்காளர் - மாவட்ட செயலகம், கிளிநொச்சி), அமரர் பிரபாகரன், நிரஞ்சனா (Group Accountant, St.John, New Zealand) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசரட்ணம் கோகுலதாசன் (விவசாயப் பணிப்பாளர் - மாவட்ட செயலகம், முல்லைத்தீவு), வேலுப்பிள்ளை தவநாதன் (ஆசிரியர் - புனித மரியாள் கல்லூரி, திருக்கோணமலை), குமுதினி கஜேந்திரன் (பிரதம கணக்காளர் - வட மாகாண திறைசேரி), சிவச் செல்வம் தயாளன் (Associate Director Transport at Blubarn Consulting Engineer, New Zealand) ஆகியோரின் மாமனாரும் பிரவீன்ராஜா (Electrical Engineer, Capital Maharajah Group) பிருதிவிராஜன், (Ux/Ui Designer, ILabs), பிரகாஷ்னி (மருத்துவபீடம், யாழ்.ப்பல்கலைக்கழகம்), பிரபோதினி (மருத்துவபீடம் - யாழ்.பல் கலைக்கழகம்), சுருதிவாசினி (மருத்துவபீடம் - யாழ். பல்கலைக்கழகம்), டினோசன், சோபிதா, அனன்யன், இளஅழகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2022) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4.00 மணியளவில் திருக்கோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 554 4622

(C-4858)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2633

### கபில்



வாழ்க்கையில்
நமக்கான நேரம்
ஒருநாள் வரும்.
அதுவரை
சிலரை
பொறுத்துக்
கொண்டு
சிலவற்றை
சகித்துக் கொண்டு
ஓடிக் கொண்டே
இருப்போம்.

### கௌசிகா

தவறு நேர்ந்துவிடுமோ
என்று
அஞ்சி எந்தச்
செயலையும் செய்யாமல்
பின்வாங்குவது இழிவானது
- ஹென்றி போர்ட்-

### கிரிஷ்

இன்னும் ஒரு நாள்ல எல்லாம்
மாறப் போகுது



நம்ம வாழ்க்கையா மாப்பிள்ளை?
வாழ்க்கையா கலெக்டர் மாமா

### லக்ஷி

நாடு முழுவதும் வேலை இல்லாம வாய்ப்புக்காக காத்திருப்போர்
எண்ணிக்கை 81 இலட்சத்தை தாண்டியது
- செய்தி-



அப்பாடா நான் கூட நான் மட்டும்
தான் வேலையில்லாம
இருக்கேன்னு பயந்துட்டேன்.

### லவன்

மனைவி:உங்களை
பார்க்காமலே கல்யாணத்துக்கு
OK சொன்னேன்.
நான் தான் தியாகி...!!



கணவர்: உன்னை பார்த்த
பின்னாலும், கல்யாணத்துக்கு
OK சொன்னேன்.
நான் தானே பெரிய தியாகி.☺

### கருணிகா

இன்று நீ படும் எல்லா
அவமானங்களும்
உனது வரும்
காலத்தின் வெற்றிக்கு
தேவைப்படும்
அனுபவமாகவும்
வாழ்க்கையில்
முன்னேற
ஒரு உந்துசக்தியாகவும்
கண்டிப்பாக அமையும்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடுத்தகட்ட போராட்டம் இரத்தக்களரியில் முடிவடையும்

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் அடுத்தகட்ட போராட்டம் இரத்தக்களரியில் முடிவடையும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் விசேட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

"நான் இந்தப் பதவியை ஏற்கும் போது டொலர் கையிருப்பு குறைந்தளவிலான நிலையில் இருந்தது. அதற்கு அப்போதைய அரசாங்கத்தின் சில செயற்பாடுகளே காரணமாகும்.

கொரோனாத் தொற்று நோய் காரணமாக சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் நிவாரணம் பெறச் சென்றபோது, இலங்கையின் கடனை மறு சீரமைக்குமாறு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இருந்த போதிலும், அந்த நேரத்தில் அரசாங்கம் அவ்வாறு செய்ய மறுத்தமையினால் இலங்கைக்கு கடன் பணம் கிடைக்காமல் போனது. சமீபகால போராட்டத்தில் சில மோதல்கள் ஏற்பட்ட போதிலும் உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

எனினும் எதிர்காலத்தில் பணவீக்க சூழல் ஏற்படக் கூடும் என்பதால், குறைந்த வருமானம் பெறும் மக்களே அதிக பாதிப்பைச் சந்திக்க நேரிடும்.



அதனால் மீண்டும் ஒரு போராட்டத்தை ஆரம்பித்தால் அது இரத்தக்களரியில் முடிவடைய அதிக வாய்ப்புகள் உள்ளது எனத் தெரிவித்தார். (4)

## மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக சதி? -சஜித் அதிருப்தி

(கொழும்பு)

தற்போதைய மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான சதி நடவடிக்கை, நாட்டை விட்டு வெளியேறிய முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கான நடவடிக்கையா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பியுள்ளார்.



மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவியேற்குமாறு அவுஸ்திரேலியாவில் வசித்து வந்த கலாநிதி.நந்தலால் வீரசிங்கவிற்கு அழைப்பு விடுத்த இந்த அரசாங்கம், தற்போது அவரை பதவி நீக்கம் செய்ய சதி செய்வதாக குற்றம் சுமத்தினார்.

மத்திய வங்கி ஆளுநருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே நந்தலால் வீரசிங்கவை நீக்குவதற்கான முதலாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.(4)

## மூட வேண்டிய நிலையில் 400 நிரப்பு நிலையங்கள்

(கொழும்பு)

400 நிரப்பு நிலையங்கள் மூடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக பெற்றோல் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய கட்டண முறையின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அடுத்த நாளுக்கான எரிபொருளை பெற்றுக்கொள்ள முன்கூட்டியே பணம் செலுத்தும் திட்டத்தை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அரசாங்கம் 700 எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கவுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4)

# கோட்டா ஓடவும் இல்லை ஒழியவும் இல்லை

## பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

"கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டைவிட்டுத் தப்பியோடவும் இல்லை. அவர் விரட்டியடிக்கப்படவும் இல்லை" என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டில் சில தரப்புக்களின் சதி முயற்சியால் திடீரென எழுந்த கொந்தளிப்பு நிலைக்குத் தீர்வு காணவே கோட்டாபய ராஜபக்ஷ சுயமாக நாட்டைவிட்டு வெளியேறி ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியிருந்தார்.



நாட்டில் தற்போது அமைதி நிலவுவதால், அவர் மீண்டும் இங்கு வந்துள்ளார்.

அவர் இலங்கைப் பிரஜை. ஒரு முன்னாள் ஜனாதிபதி. இந்நிலையில், அவர் வெளிநாடுகளில் தங்க வேண்டிய அவசியம் இல்லை.

நாடு திரும்பியுள்ள அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய சிறப்புரிமைகளை அரசு வழங்குகின்றது.

அவர் விரும்பினால் மீண்டும் "மொட்டு"க்கட்சி ஊடாக அரசியலுக்குள் நுழையலாம். இது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும்" என தெரிவித்தார். (4)

# இராசிபலன்

05.09.2022
ஆவணி 20, திங்கட்கிழமை
தசமி பின்னிரவு 3.25 மணிவரை
மூலம் முன்னிரவு 6.28 மணிவரை

சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
ஆவணி மூலம்

சந்திராஷ்டமம்
கார்த்திகை
ரோகிணி

**வளவன்**



மேஷம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.



ரிஷபம்

குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல்நலனில் கவனம் தேவை



மிதுனம்

விருந்தினர்கள் நண்பர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



கடகம்

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பல நாட்களாக செய்ய நினைத்த வேலை ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.



சிம்மம்

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வார், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.



கன்னி

கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், சுபசெய்திகள் வந்து சேரும்.



துலாம்

நீண்ட நாளை விருப்பம் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.



விருச்சிகம்

வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும்.



தனுசு

சோம்பலை விலக்குவது நல்லது, சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.



மகரம்

குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.



கும்பம்

எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



மீனம்

மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**மற்றவர்களின் இயல்பான குணத்தோடு அவர்களை ஏற்றுக்கொள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# அவளே புத்திசாலி



சுப்புவும் “உன் மாதிரி மனைவி இருந்தால் அவள் கணவன் சொன்ன எதையும் நம்பிவிடுவாள். அது பொய்யா மெய்யா என்றுகூட யோசிக்க மாட்டாள். அது சரி கரிசலாங்கண்ணி விடயத்திற்கு வருவோம்” என்றான்.

கமலாவும் “நான் சொன்னது உண்மை. வேண்டுமானால் சீதாவின் கணவனையே நீங்கள் சந்தித்துக் கேட்டுப் பாருங்கள்” என்றாள்.

சுப்புவும் சீதாவின் கணவனைச் சந்தித்து கரிசலாங்கண்ணி பற்றிக் கேட்டான். அதற்கு அவனும் “அதற்கு எட்டு சுலோகங்களில் மந்திரங்கள் உள்ளன. அவற்றை ஒரு குறிப்பிட்ட வரிசையாக உச்சரிக்க வேண்டும். அப்போதுதான் அதன் பலன் கிட்டும். இதைப் பெண்கள் தான் செய்ய வேண்டும்.

சீதா ஒரு நாள் இதைச் செய்தாள். ஒரு எலி வங்கில் நூறு வராகன்கள் இருப்பது அவளுக்குத் தெரிந்ததாம். அவளுக்கு அந்த அபூர்வ சக்தி ஒரு மணி நேரத்திற்கு இருந்தது.

வேறு யாராவது இருந்தால் அங்கும் இங்கும் அலைந்து வேறு எங்காகிலும் புதையல் இருக்கிறதா என்று பார்த்திருப்பார்கள். சீதா கிடைத்ததே போதும் என்று திருப்தி அடைந்து விட்டாள். அந்த சந்தோஷத்தில் சுலோக வரிசையை மறந்து விட்டாள். அதை நினைவிற்குக் கொண்டு வர பன்னிரெண்டு ஆண்டுகளாகுமே” என்றான்.

சுப்புவும் “அவ்வளவு நீண்ட காலமா?” என்று கேட்கவே அவனும் “நாங்கள் கூட நீங்கள் நினைப்பது போலத்தான் எண்ணினோம்.

ஆனால் உங்கள் மாமன் மகள் கமலா அந்த எட்டு சுலோகங்களை எவ்வளவு வரிசைப்படுத்தலாம் என்று கணக்கிட்டு நாற்பதாயிரத்து முந்நூற்று இருபது என்று சொன்னாள். இந்த சுலோகங்களை ஒரு அமாவாசையன்று சொன்னாலே பலன் கிடைக்கும்.

ஒரு ஆண்டிற்குப் பன்னிரெண்டு அமாவசைகள். நாம் அதிர்ஷ்டமுள்ளவர்களானால் பன்னிரெண்டு வருடங்களில் பயனடையலாம். அதிர்ஷ்டம் இல்லையானால் இரண்டாயிரத்து அறு நூற்று எண்பத்து எட்டு ஆண்டுகள் கூட ஆகலாம். இதெல்லாம் அவரவருக்குத் தோன்றும் விதத்தில் செய்ய வேண்டியதாகும்” என்றான்.

சுப்புவும் “அந்த எட்டு சுலோகங்களை மட்டும் கூறுங்கள். நான் சரியான வரிசையில் கொண்டு வருகிறேன்” என்றான். எனவே சீதாவின் கணவனும் ஓர் ஓலைச் சுவடியிலிருந்து சுலோகங்களைக் குறித்துக் கொடுத்தான். சுப்பு அதை எடுத்துக் கொண்டு வீட்டை அடைந்த போது, கமலா “அத்தான்! மந்திரத்தால் மாட்டுச் சாணத்தைத் தங்கமாக்கி விடலாமே. இதை என் சிநேகிதி ஒருத்தி சொன்னாள்” என்றாள்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## யார் இவன்?




இரவும் இருளாகத்தான் இருக்கிறது. வெள்ளி முளைக்கிற போதும் இருளாகத்தான் இருக்கிறது. ஆனால், வெள்ளி முளைத்தபின் அந்த இருள் ஏனோ பயத்தைத் தருவதில்லை.

அதிகாலை இருளில் பெண்கள் தனியாக தெருவில் போகக்கூட பயப்படுவதில்லை. விடியல் பக்கத்தில் இருக்கிறது என்கிற எண்ணமே பயத்தைப் போக்கி விடுகிறது.

பல சமயங்களில் துணைக்கு வருகிறவர் பயந்தாங்கொள்ளியாக இருப்பார். ஆனால் அருகில் ஓர் ஆள் இருப்பது நம்முடைய பயத்தைத் தெளிய வைத்து விடும்.

கண்ணகியையும் கவுந்தி அடிகளையும் உட்காரச் சொல்லி விட்டு காலைக்கடன்களுக்காக சிறிது விலகிச் சென்றான் கோவலன். அப்போது எதிரில் ஒருவன் வந்தான்.

‘யார் இவன்? இவனைப் புகார் நகரில் எப்போதோ பார்த்தது போல் இருக்கிறதே’ என்று நினைத்தான் கோவலன்.

### மாதவியின் கடிதம்

வந்தவன் பெயர் கோசிகன். அவன் கோவலனை ஏற்கெனவே ஓரிரு முறை புகார் நகரில் பார்த்திருந்தான். மாசாத்துவானும் தன் மகனைப்பற்றி அவனுக்குச் சில அடையாளங்களைச் சொல்லியிருந்தான். அவற்றையெல்லாம் இப்போது பொருத்திப் பார்த்தான் அவன்.

எல்லாம் சரியாகப் பொருந்துகின்றன. ஆனால் கவலையாலும் பயணத்தாலும் களைத்திருந்த கோவலனைப் பார்க்கும் போது ‘இவன் கோவலன்தானா’ என்கிற சந்தேகம் ஏற்பட்டது கோசிகனுக்கு.

தன்னால் கோவலனை அடையாளம் காண முடியவில்லை என்பதை வெளிக்காட்டிக் கொள்ள வெட்கப்பட்டானோ அல்லது “நீதான் கோவலனா?” என்று கேட்டால் மரியாதைக் குறைவாக இருக்கும் என்று நினைத்தானோ... எப்படி அவன் கோவலன் தான் என்பதை நிச்சயிப்பது என்று யோசித்தான் கோசிகன்.

அப்போது அருகே குருக்கத்தி (வசந்த மல்லிக்) கொடி பந்தலாக வளர்ந்திருந்ததைப் பார்த்தான். குருக்கத்திக் கொடிப் பந்தலை ‘மாதவிப் பந்தல்’ என்று சொல்லும் வழக்கம் உண்டு.

கோசிகனுக்கு மொழிப்புலமை அதிகம் அதை வைத்து ஒரு யுத்தி செய்தான். ‘மாதவியே உன்னைப் பிரிந்த காதலன் யாரோ? உன்மேல் பழிச்சொல் சொன்னவரும் யாரோ?

அதனால்தான் மாதவியின் கண்ணீர்த் துளிகள்போல நீயும் பூக்களை உதிர்க்கிறாயா?’ என்று கோவலன் காதில் விழும்படி கேட்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை


கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 68

தாய்நாடு கட்சியின் துணைத் தலைவர் ஒலெக்சாண்டர் துர்ச்சினோவ் செயல் (பதில்) ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார், இந்த நடவடிக்கையை யானுகோவிச் ஒரு சதிப்புரட்சி என்று கண்டித்தார்.

பெப்ரவரி 24 அன்று இடைக்கால அரசாங்கம் யானுகோவிச் மீது சுதந்திர சதுக்கப் போராட்டக்காரர்களின் மரணம் தொடர்பாக வெகுஜன கொலைக் குற்றச்சாட்டை சுமத்தியது மற்றும். அவரை கைது செய்ய பிடி ஆணை பிறப்பித்தது.

உக்ரைனியப் பொருளாதாரம், மைதான் எதிர்ப்புக்களுக்கு முன்னதாகவே போராடிக்கொண்டிருந்தது. மேலும் இப்போராட்டம் அதிகாரத்தை மாற்றிய போதும் உக்ரைனின் ஹ்ரிவ்னியா (hryvnya) நாணயம் வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சி அடைந்தது. இதனால் சர்வதேச நாணய நிதியம் (IMF) இவ் வீழ்ச்சியை மீட்டெடுக்க முயன்றது.

இடைக்கால உக்ரைனிய அரசாங்கம் தாய்நாடு கட்சித் தலைவர் அர்செனி யாட்சென்யுக்கை பிரதமராக நியமித்தது. மேலும் ஜனாதிபதித் தேர்தல்கள் மே 2014 இல் திட்டமிடப்பட்டது. யானுகோவிச் பெப்ரவரி 28 அன்று ரஷ்யாவின் ரோஸ்டோவ்-நா-டோனுவில் மீண்டும் தோன்றினார். மேலும் அவர் ரஷ்ய மொழியில் ஒரு எதிர்மறையான உரையை நிகழ்த்தினார். அவர் தான் தான் இன்னும் உக்ரைனின் சரியான ஜனாதிபதி என்று வலியுறுத்தினார்.



தலைநகர் கீவ்வில் உள்ள எதிர்ப்பாளர்கள் புல்டோசரைப் பயன்படுத்தி பொலிஸ் தடுப்பு எல்லைகளை உடைக்க முயன்றனர்.

முதல் யாட்சென்யுக் அரசாங்கம்
உக்ரைனின் 16வது அமைச்சரவை (1990 முதல்)



### முதல் யாட்சென்யுக் அரசாங்கம்

உக்ரைனியப் புரட்சிக்குப் பின் 27 பெப்ரவரி 2014 அன்று உக்ரைனில் அர்செனி யாட்சென்யுக் தலைமையிலான முதல் அரசாங்கம் உருவாக்கப்பட்டது. அமைச்சரவையானது Batkivschyna, UDAR மற்றும் Svoboda ஆகிய கட்சிகள் மற்றும் பாராளுமன்ற பிரிவுகளான பொருளாதார அபிவிருத்தி மற்றும் இறையாண்மை கொண்ட ஐரோப்பிய உக்ரைன் மற்றும் பிற சுயேச்சை எம்.பிக்கள் ஆகியவற்றின் கூட்டணியாக உருவாக்கப்பட்டது.

ஜூலை 2014, UDAR, ஸ்வோபோடா மற்றும் 19 சுயேட்சை எம்.பிக்கள் கூட்டணியில் இருந்து வெளியேறி, ஒக்டோபர் 2014 இன் பிற்பகுதியில் பாராளுமன்ற தேர்தலுக்கு வழி வகுத்தது. பிரதம மந்திரி யாட்சென்யுக் அதே நாளில் தனது இராஜினாமாவை அறிவித்தார். ஆனால் பாராளுமன்றம் 31 ஜூலை 2014 அன்று அவரது இராஜினாமாவை நிராகரித்தது. 26 ஒக்டோபர் 2014 உக்ரைனிய பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு இரண்டாவது யட்சென்யுக் அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

உக்ரைன் பிரதம மந்திரி வேட்பாளராக. 371 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்செனி யாட்சென்யுக்கிற்கு வாக்களித்தனர். 2005 இல் யூலியா திமோஷென்கோ பெற்ற சாதனையான 373 வாக்குகளை விட இரண்டு வாக்குகள் மட்டுமே குறைவாக இருந்தன.

### ரஷ்ய படையெடுப்பு மற்றும் கிரிமியாவின் இணைப்பு

2014 இல் நடந்த தேர்தலில் கிரிமியா மக்கள் ரஷ்ய சார்பு உக்ரைனிய ஜனாதிபதியாக இருந்த விக்டர் யானு கோவிச் மற்றும் அவரது பிராந்திய கட்சிகளுக்கு ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் வலுவாக வாக்களித்திருந்தனர். மைதான் எழுச்சியைத் தொடர்ந்து யாரும் எதிர்பாராத நிலையில் விக்டர் யெனு கோவேய்க் ஜனாதிபதி பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதாக பாராளுமன்றம் பிரகடனப்படுத்தியது. அதற்கு முன்பே அவர் ரஷ்யாவின் உதவியை நாடி, அங்கு தப்பி ஓடினார். இதைத் தொடர்ந்து உக்ரைனில் ஐரோப்பிய சார்பு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

(தொடரும்)

# 1.1 பில்.டொலர் பெறுமதியான ஆயுதங்களை தாய்வானுக்கு வழங்கியது அமெரிக்கா

(தாய்பே)
சீனாவை ஆத்திர மூட்டும் வகையில் தாய்வானுக்கு 1.1 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதங்களை வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது.

உள்வரும் தாக்குதல்கள், கப்பல் எதிர்ப்பு மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கண் காணிக்க ஒரு ரேடார் அமைப்பு அடங்கலாக இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த ஒப்பந்தத்தை திரும்ப் பெற வேண்டும் அல்லது எதிர் நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.



இந்த ஒப்பந்தம் வோஷிங்டனுக்கும் பீஜிங்கிற்கும் இடையிலான உறவுகளை கடுமையாகப் பாதிக்கும் என்றும் அமெரிக்காவில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (4)

# சுவாமி விவேகானந்தரின் சிலை மெக்சிகோவில் திறந்து வைப்பு

(மெக்சிக்கோ)
மெக்சிக்கோவில் முதல் முறையாக சுவாமி விவேகானந்தரின் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுவாமி விவேகானந்தரின் சிலையை இந்திய மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா திறந்து வைத்தார்.

இது குறித்து ஓம் பிர்லா வெளியிட்டுள்ள தனது டுவிட்டர் பதிவில்,

“மெக்சிகோவில் சுவாமி விவேகானந்தரின் சிலையை திறந்து வைப்பதில் பெருமை அடைகிறேன். இலத்தீன் அமெரிக்காவில் சுவாமிஜியின் முதல் சிலை இதுவாகும்.

இச்சிலை மக்களுக்கு, குறிப்பாக இப்பகுதி இளைஞர்களுக்கு, மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் உத்வேகமாக இருக்கும். நமது நாட்டை புதிய உயரத்திற்கு கொண்டு செல்லும். ‘சுவாமிஜியின் செய்தி மற்றும் மனித குலத்திற்கான போதனைகள் புவியியல் கட்டுப்பாடுகள் மற்றும் காலத்திற்கு அப்பாற்பட்டது. அவரது செய்தி முழு மனித குலத்திற்கும் உள்ளது.



இன்று மெக்சிக்கோவில் அவரது சிலையை திறந்து வைத்து அவருக்கு பணிவான அஞ்சலி செலுத்துகிறேன் என தெரிவித்துள்ளார். (4)

# பிரித்தானியாவின் அடுத்த பிரதமர் யார்?

## இன்று உத்தியோகபூர்வ அறிவிப்பு

(லண்டன்)
பிரித்தானியாவின் அடுத்த பிரதமர் யார் என்ற முடிவு இன்று அறிவிக்கப்படவுள்ளது.

இதற்கமைய வெளியுறவுச் செயலாளர் லிஸ் ட்ரஸ் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ளதாக கூறப்படுகிறது.

புதிய பிரதமரை தெரிவு செய்வதற்காக ஆளும் கன்சர்வேடிவ் கட்சிக்குள் நடைபெற்ற தேர்தல் நிறைவடைந்துள்ளது.

இந்தத் தேர்தலில் இந்த கட்சியை சேர்ந்த சுமார் 2 இலட்சம் உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

பிரித்தானிய பிரதமருக்கான போட்டியில் லிஸ் ட்ரஸ், இந்திய வம்சாவளி ரிஷி சுனிக் இடையே போட்டி நிலவியது.

இந்த நிலையில் புதிய பிரதமர் யார் என்பது குறித்து இன்று பிரித்தானிய மகாராணி 2 ஆம் எலிசபெத் முறைப்படி அறிவிக்கவுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ரணிலின் ஆட்சி ஆறு மாதம் மாத்திரமே

## அடித்துக் கூறுகிறார் வாசு

**(கொழும்பு)**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இன்னும் ஆறு மாத காலம் மாத்திரமே ஆட்சியில் இருக்குமென பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நாட்டில் உள்ள பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் எந்தவொரு தீர்வும் இல்லை என்பதால் அவரது ஆட்சிக்காலம் மிகக் குறுகியதாக அமையும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றில் செயற்படும் சுயாதீன கட்சிகளினால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் கூட்டணியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

சுயாதீன கட்சிகளினால் ஸ்தாபிக்கப்படவுள்ள புதிய அரசியல் கூட்டணியில் அரசாங்கத்தில் இருந்து பிரிந்து சுயாதீனமாக செயற்படுவோர், இளைஞர், பெண்கள் உட்பட பலரை கூட்டணியின் கொள்கைகளுக்கிணங்க இணைக்க எதிர்பார்த்துள்ளது. (4)



# பிரசன்ன ரணதுங்கவின் அமைச்சில் ஊழல்


## விசாரணைக்கு பணிப்பு

(கொழும்பு)

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களையும் கணக்காய்வு செய்ய அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

குறித்த அமைச்சின் கீழ் உள்ள 21 நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்தமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



சில குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளை சில வழக்குகள் விசாரணையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# 20 ஆயிரம் அரச ஊழியர்கள் இவ்வருடத்துடன் ஓய்வு

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் இருபதாயிரம் அரச ஊழியர்களுக்கு ஓய்வு அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கு 60 வயதில் ஓய்வு அளிக்க வேண்டும் என்ற அரசின் முடிவின்படி, ஒரேயடியாக அரசுப் பணியில் இருந்து பலர் வெளியேறி வருகின்றனர்.

மருத்துவர்கள், தாதியர்கள், பொறியியலாளர்கள் தவிர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கு 60 வயது பூர்த்தியாவதற்கான சுற்றறிக்கையை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாகப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன தெரிவித்துள்ளார்.

அதற்கான திருத்தங்களை அமைச்சரவையில் கொண்டு வருவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (4)

# புதிய அமைச்சரவையில் பெண்களுக்கு முன்னுரிமை

## பிரதமர் தினேஸ் குணவர்த்தன



(கொழும்பு)

புதிய அமைச்சரவையை நியமிக்கும் போது பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு பெண்ணொருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஆளும் கட்சி கூட்டத்தின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகள் குறித்து நடைமுறை புரிதல் இல்லாத ஆண்களுக்கு இந்த அமைச்சை ஒதுக்குவது அர்த்தமற்ற செயல் என சுட்டிக்காட்டிய பிரதமர், பெண்களின் பிரதிநிதித்துவத்தை பேண வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார். (4)

# அரசியல் அறிவு கோட்டாவிடம் இல்லை

## உதயங்க வீரதுங்க

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வரக் கூடாது என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் அறிவு இல்லாதவர். எனினும், சில பதவிகளில் திறமையான நிர்வாக அதிகாரி என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வந்தால் அது முட்டாள்தனம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வார இறுதி நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார் என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி. நாலக கொடஹேவா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# சுற்றுலாப்பயணிகளின் வருகை ஓகஸ்டில் திடீர் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில், ஓகஸ்ட் மாதத்தில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளதாக தெரிய வருகிறது.

ஜூலை மாதத்தில் 47,293 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். ஓகஸ்ட் மாதத்தில் இந்த எண்ணிக்கை 20 சதவீதம் குறைந்து 37,760 ஆக உள்ளது.

இந்த வருடம் ஓகஸ்ட் மாத இறுதி வரை 4,96,420 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இவ்வருடம் இலங்கைக்கு ஒரு மில்லியன் சுற்றுலாப்பயணிகளை இலக்காகக் கொண்டு, அதனை நிறைவு செய்வதற்கு இன்னும் நான்கு மாதங்களில் 5 இலட்சம் சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு அழைத்து வர வேண்டும்.

ஓகஸ்ட் மாதத்தில் இங்கிலாந்து, இந்தியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். (4)

# உடன்பாட்டை எட்டியதில் மகிழ்ச்சி- IMF தலைவர்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக ஊழியர்கள் மட்ட உடன்பாட்டை எட்டியதில் மகிழ்ச்சியடைவதாக சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை 48 மாத விரிவாக்க நிதி வசதிக்கான உடன்படிக்கையை அண்மையில் எட்டியது.



குறித்த ஊழியர்மட்ட உடன்படிக்கையானது இலங்கைக்கு ஒரு முக்கியமான முன்னேற்றம் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா கூறியுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்!.

– தானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யமாட்டார்கள்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளார்.

நாட்டை விட்டுத் தப்பி ஓடிய ஒருவர் வெறும் ஐம்பது நாட்களில் மீண்டும் நாடு திரும்பும் போது, எந்த எதிர்ப்பும் ஏற்படவில்லையெனில், அதற்குள் இருக்கக் கூடிய சூக்குமம் எத்தன்மையதென்பதை எவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

அதுமட்டுமன்றி, நாடு திரும்பிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வரவேற்பதற்கு ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதிகள் விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர் என்பது வேறு கதை.

ஆக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியுடனும் ஆசியுடனும் கோட்டா நாடு திரும்பியுள்ளார் என்பது தெரிந்ததே.

இவை ஒருபுறமிருக்க, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில்; இனப்பிரச்சினை தொடர்பில் முக்கிய விடயங்களைப் பிரஸ்தாபித்திருந்தார்.

நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதாக இருந்தால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்து அவரின் உரையில் புரையோடியிருந்தது.

எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் ஆற்றிய உரை தொடர்பில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடுவாரா என்றால், ஒருபோதும் இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும்.

ஆம், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்று சிங்கள ஆட்சியாளர்கள் கூறுவது, சர்வதேச சமூகத்தைச் சமாளிப்பதற்கானதேயன்றி வேறில்லை என்பது தான் உண்மை.

அந்தவகையில்தான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையும் அமைந்தது என அறுதியிடலாம்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என சிங்கள ஆட்சியாளர்கள் உளப்பூர்வமாக நினைப்பார்களாயின் தீர்வு என்பது அவ்வளவு கடினமான விடயமன்று.

ஆனால், அவர்களைப் பொறுத்தவரை இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பது தான்.

தவிர, எப்பாடுபட்டும் தமிழ் மக்களின் இருப்பை வெற்று வெறுதாக்க வேண்டும் என்பதுதான் அவாகளின் ஒரே முடிவு. இதற்குப் பல உதாரணங்களைக் கூறமுடியும்.

குறிப்பாக தமிழ் மக்களின் வாக்குகளினால் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இம்மியும் கருசனை காட்டவில்லை.

தங்களின் தாயைப் பறிகொடுத்த தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து தங்களின் தந்தையை விடுதலை செய்யுமாறு கோரினர்.

அதற்கு உங்களின் அப்பா அடுத்த புத்தாண்டுக்கு முன்னதாக உங்களுடன் இருப்பார் என உறுதியளித்தார்.

இந்த நாட்டின் ஜனாதிபதி பாலகர்களுக்கு அளித்த வாக்குறுதியைக்கூட நிறைவேற்றவில்லை எனும்போது அதற்குப் பின்னால் இருக்கக்கூடிய தமிழின எதிர்ப்பு எத்தன்மையதென்பதை நம் தமிழ் அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆம், இப்போதுகூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு ரெலோ அமைப்பினர் கோரினர்.

இதற்கு முன்னதாக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும் அந்தக் கோரிக்கையை முன் வைத்திருந்தார்.

ஆனால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட எதையுமே இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் செய்யப் போவதில்லை என்பதுதான் நிறுதிட்டமான உண்மை.

# இலங்கை - இந்திய உறவை யாராலும் பிரிக்க முடியாது

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

இலங்கையையும் இந்தியாவையும் எவராலும் பிரிக்க முடியாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் பல நூற்றாண்டுகளாக தொடர்வதாகவும், அது வலுவாக தொடரும் என்றும் அமைச்சர் சப்ரி தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் அலி சப்ரி ஏனையோர் கோரிக்கைகளை முன் வைக்கும் போது இந்தியா இலங்கைக்கு தனது ஆதரவை ஒரு முக்கியமான கட்டத்தில் வழங்கியதாக தெரிவித்தார்.

சுதந்திரத்தின் பின்னர் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருவதாகவும், இந்தியாவின் ஆதரவின்றி இலங்கை மக்கள் உயிர் பிழைத்திருக்க மாட்டார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இது குடும்ப உறுப்பினர்களிடையே கூட பொதுவானது என்று அவர் கூறினார். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் யாரும் வர முடியாது.

இந்தியாவின் முன்னேற்றம் மற்றும் செழிப்பு இலங்கைக்கு நன்மை பயக்கும் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

எந்த நாடும் தனியாக முன்னேறவில்லை. ஆனால் பிராந்தியங்களாக முன்னேறுகிறது. இது வட அமெரிக்கா, மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் ஆசியான் பிராந்தியங்களின் வளர்ச்சியால் தெளிவாகத் தெரிகிறது. எனவே இந்தியாவின் அபிவிருத்தி இலங்கைக்கும் பிராந்தியத்திற்கும் நன்மை பயக்கும் என அமைச்சர் சப்ரி தெரிவித்தார். (4-7)

## கொரோனாவால் மேலும் நால்வர் மரணம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 04 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாட்டில் பதிவான மொத்த கொவிட் இறப்புகளின் எண்ணிக்கை 16,711 ஆகும். (4-7)

## சிறுப்பிட்டியில் விபத்து மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி நீர்வேலி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கணவன், மனைவி மற்றும் அவர்களது பிள்ளை படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5 மணியளவில் காரும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் இந்த விபத்து இடம் பெற்றது.

8 வயதுச் சிறுவன் கால் முறிந்த நிலையில் 48 வயதுடைய தந்தையும் 42 வயதுடைய தாயும் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்துத் தொடர்பில் கார் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (4-7,60)

## சுகாதாரத் துறையில் கொள்கை மாற்றம் அவசியம்

### ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

சுகாதாரத் துறையில் உடனடி கொள்கை மாற்றத்துக்கான அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி இதனை வலியுறுத்தியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், தற்போது அதிகரித்துள்ள மருந்துப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இதன் போது வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் வெளிநாட்டு கையிருப்பை அதிகரிப்பதற்கு, வைத்தியர்களுக்கு விடுமுறை வழங்கி வெளிநாடுகளில் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும் என கோரப்பட்டதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (4-7)

# முன்னாள் ஜனாதிபதி கோட்டாவை உடனடியாக கைது செய்யுங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்ட தூரநோக்கற்ற தீர்மானங்கள் காரணமாகவே நாடு இன்று வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.

மேலும் மக்களை உணவுக்காக போராடும் நிலைக்கு தள்ளிய கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஆனால் நாட்டை வங்கு ரோத்து நிலைக்கு தள்ளிய கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இன்று நாட்டிற்கு வருகை தந்தவுடன் அரசின் சலுகைகள் உட்பட விசேட பாதுகாப்பு வசதிகள் வழங்கப்பட்டு இருக்கிறது.

இருப்பினும் கோட்டாபய ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் காரணமாக மூன்று வேளை உணவு உட்கொண்டவர்கள் இன்று இரண்டு வேளை மாத்திரமே உணவு உட்கொள்கிறார்கள்.

இரசாயன உரத்தை தடை செய்து நாட்டு மக்கள் உணவுக்காக போராடுகிறார்கள். பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருக்கிறது.

இதன் காரணமாக உடனடியாக கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்பட வேண்டும். அவரைக் கைது செய்வதன் மூலம் 22 இலட்சம் மக்களை வீதி யோரங்களில் நிறுத்தி நாட்டின் பொருளாதாரத்தை அதளபாதாளத்தில் தள்ளி நாட்டை வங்ரோத்து நிலைக்கு கொண்டு வந்தமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு உரிய தண்டனையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## புத்தளத்தில் கோர விபத்து ஒருவர் பலி, மூவர் காயம்

(புத்தளம்)

புத்தளம் - சாலியவெவ 16 ஆம் கட்டை பகுதியில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

அநுராதபுரம் - புத்தளம் ஊடாக கொழும்பு நோக்கிப் பயணம் செய்த தனியார் பஸ் ஒன்றும், புத்தளம் பகுதியில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த வான் ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சாலியவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இந்த விபத்தில் வான் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அந்த சாரதிக்கு அருகில் இருந்து பயணம் செய்த மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

அத்துடன், குறித்த தனியார் பஸ்ஸில் பயணித்த மேலும் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சாலியவெவ பொலிஸார் இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடைக்காலம் ஆரம்பம் கட்டாக்காலிகள் அட்டகாசம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட பாண்டியன்குளம் மற்றும் மாந்தை கிழக்குப் பகுதிகளில் இரவு நேரங்களில் வயல் பகுதிகளுக்குள் கட்டாக்காலி கால்நடைகள் இறங்கி பயிர்களை நாசம் செய்வதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்

அறுவடைக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில், பல கிராமங்களில் அறுவடைகள் இன்னமும் தொடங்கப்படாத நிலையில் வயல் பகுதிக்குள் குறிப்பாக இரவு நேரங்களில் இறங்கி வயல்களை நாசம் செய்யும் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

வீதிகளில் இரவு நேரங்களில் கட்டாக்காலிகளின் தொல்லைகள் அதிகரித்திருப்பதுடன் அவற்றினை கட்டுப்படுத்தும் செயற்பாட்டினை பிரதேச சபை மேற்கொள்ளுமாயின் இரவு நேரங்களில் வயற்பகுதிகளுக்குள் இறங்கி நாசம் செய்யும் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த முடியும் என பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர். (4-315)

# மஞ்சள் கொண்டு சென்ற இருவர் விசாரணையின் பின் விடுவிப்பு

(குருமன்காடு)

ஏ9 வீதியில் மஞ்சள் கொண்டு சென்ற வாகனம் வவுனியா, ஈரப்பெரியகுளம் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டு 2 மணிநேரம் இடம்பெற்ற விசாரணைகளின் பின் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஏ9 வீதியில் கூலர் ரக வாகனத்தில் மஞ்சள் கொண்டு செல்லப்படுவதாக ஈரப்பெரியகுளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த வாகனத்தை சோதனை செய்த பொலிஸார் பெருந்தொகை பச்சை மஞ் சளினை மீட்டதுடன், அதனைக் கொண்டு சென்ற இருவரையும் தடுத்து வைத்து விசாரித்தனர்.

இதன்போது குறித்த பச்சை மஞ்சள் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்படவில்லை என்பது பொலிஸாருக்கு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் வாகனத்துடன் மஞ்சள் விடுவிக்கப்பட்டதுடன், தடுத்து வைத்த இருவரையும் விடுவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-250-299)

# கடத்தலுக்கு தயாராக இருந்த 20 கிலோ கஞ்சா மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் கடத்தலுக்கு தயாராக இருந்த 20 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் 19 ஆம் கட்டைப் பகுதியில் கஞ்சா கடத்தப்பட இருப்பதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற இராணுவத்தினர் கடத்தல்காரர்கள் தப்பி ஓடிய நிலையில் கடத்தலுக்கு தயாராக இருந்த கஞ்சா பொதி யினை மீட்டுள்ளார்கள். சுமார் 20 கிலோகிராம் கஞ்சா இதன் போது மீட்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் தகவலைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த ஒட்டுசுட்டான் பொலிஸார் கஞ்சா பொதிகளை மீட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் கஞ்சாவினை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். (4)

# மரக்கடத்தல் முறியடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் 17 ஆம் கட்டை தேக்கங்காட்டுப் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் தேக்கு மரங்கள் அறுக்கப்பட்டு கடத்தப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் கடந்த 1 ஆம் திகதி அன்று அதிகாலை வேளை சட்டவிரோதமான முறையில் அறுக்கப்பட்ட தேக்கங்குற்றிகளை உழவு இயந்திரத்திலும் டிப்பரிலும் ஏற்றிக் கொண்டிருந்த வேளை தகவலறிந்த மாங்குளம் வனவளத் திணைக்களத்தினர் இராணுவத்தினரின் உதவியுடன் குறித்த பகுதிக்குச் சென்றவேளை கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றுள்ளார்கள்.

இதன்போது அறுக்கப்பட்ட தேக்கங்குற்றிகள் 65 மீட்கப்பட்டுள்ளதுடன் இதன் பெறுமதி அண்ணளவாக 10 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் உழவு இயந்திரமும் டிப்பர் வாகனவும் மாங்குளம் வனவளத்திணைக்கள அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது

சந்தேகநபர்கள் தொடர்பிலான விசாரணையில் வனவளத் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளார்கள். (4)

# அதிக உணவுப் பணவீக்கத்தை கொண்ட நாடாக இலங்கை

(முல்லைத்தீவு)

இலங்கையில் கடந்த மாதத்தில் உணவுத்துறையின் பணவீக்கம் 93.7 சதவீதமாக அதிகரித்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் முட்டை , பிஸ்கட், கோழி , பாண், மீன், பருப்பு மற்றும் பழங்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன.

முந்தைய மாதமான ஜூலையில் உணவுத் துறையில் பணவீக்கம் 90.9 சதவீதமாக இருந்த நிலையில் ஓகஸ்ட் மாதத்தில் 93.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் உலகிலேயே அதிக உணவுப் பணவீக்கத்தைக் கொண்ட நாடாக இலங்கை மாறியுள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் இந்தப் பணவீக்க நிலைமை ஒரு சாதனையாகும். (4)

# இலங்கையுடன் இணைய 'பாரிஸ் கிளப்' தயார்

(கொழும்பு)

பாரிய கடன் வழங்கும் நாடுகளின் குழுவான பாரிஸ் கிளப், இலங்கையுடன் கடன் மறுசீரமைப்பு செயன்முறையை ஆரம்பிக்க தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

பாரிஸ் கிளப் அல்லாத உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நிதி உத்தரவாதங்களை சரியான நேரத்தில் வழங்குவதற்கும் இலங்கையின் கடன் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை உறுதி செய்வதற்கும் தாம் தயாராக உள்ளதாக அந்தக் குழு கூறியுள்ளது.

இலங்கை அதிகாரிகளுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் 48 மாத ஏற்பாட்டாக, விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் எட்டப்பட்ட ஊழியர் மட்ட உடன்படிக்கையையும் பாரிஸ் கிளப் வரவேற்றுள்ளது.(4)

# மாணவனின் சைக்கிள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த 17 வயதான மாணவன் ஒருவர் சந்தை வளாகத்தில் துவிச்சக்கரவண்டியை நிறுத்திவிட்டு மேலதிக வகுப்பிற்காக பேருந்தில் யாழ்பாணம் சென்ற போதே குறித்த திருட்டு இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.(4-30)



புலம்பெயர்ந்து தற்போது லண்டனில் வசித்து வரும் படைப்பாளி வேணி சதீஸின் "ஆட்காட்டி" கவிதை நூலின் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் பொது சன நூலக கேட்போர் கூடத்தில் எழுத்தாளரும் ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி.கோகிலா மகேந்திரன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 230 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 250 |
| தக்காளி | 240 | 260 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 |
| கோவா | 400 | 400 | 450 |
| கரட் | 320 | 350 | 380 |
| பூசணி | 140 | 120 | 120 |
| புடோல் | 100 | 180 | 140 |
| வாழைக்காய் | 250 | 180 | 170 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 180 |
| பாகற்காய் | 450 | 550 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 180 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 160 | 150 | 150 |
| கறிமிளகாய் | 800 | 650 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 500 |
| போஞ்சி | 500 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 120 |
| தேசிக்காய் | 300 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-70 |
| இராசவள்ளி | 220 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 350 |
| முள்ளங்கி | 140 | 160 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 |
| வல்லாரை | 25 | 20 | 50 |
| ஈரப்பலா | 80 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவிவகார...

டமா அதிபர் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குழுவும் அடங்குகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இந்த அமர்வின் போது பொறுப்புக் கூறல் தொடர்பில் வெளித்தரப்பினரை உள்ளடக்கிய பொறிமுறைகளை நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் உள்ளக பொறிமுறையின் ஊடாக பொறுப்புக்கூறல் தொடர்பில் தீர்வு எட்டப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். எதிர்வரும் 12ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வில் அமைச்சர் உரையாற்ற உள்ளார். (4-7)

## சஜித் அணியின்...

திபதியின் பாதுகாப்பு விவகார ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், "எமது கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. பிரிந்து சென்றவர்கள் யாராக இருந்தாலும் தாய்க் கட்சியுடன் இணைந்து கொள்வதில் தடையே இல்லை.

ஆனால், நாங்கள் எந்தக் கட்சியில் இருந்தும் உறுப்பினர்களை கவர்ந்து இழுக்க மாட்டோம். விரும்பியோர் வரலாம் என்பதே எமது கொள்கை" எனக் கூறியுள்ளார். (4-7)

## பதப்படுத்தப்பட்ட...

தில்லை என உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இதன் காரணமாக ஒட்டுமொத்தமாக உணவுப் பொருட்களின் விலையை குறைக்க முடியாது என அவர் வலியுறுத்தியுள்ளார். (4-7)

## லிட்ரோ...

இன்று திங்கட்கிழமை முதல் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலையை குறைக்க நடவடிக்கை எடுப்பதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது

உலக சந்தையின் எரிவாயு விலையை கருத்திற்கொண்டு விலைச் சூத்திரத்திற்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார். (4-7)

## தம்பி...

பக்ஷவை அவரின் சகோதரரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ நேரில் சந்தித்தார்.

கோட்டாபயவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு நேற்று முன்தினம் சென்று அவரைச் சந்தித்த மகிந்த அவருடன் இரு மணிநேரம் உரையாடினார்.

இதையடுத்து, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 50 இற்கும் மேற்பட்டோர் கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர். (4-7)

## விமல் தலைமையி...

இலங்கை கூட்டணி" என்ற புதிய கூட்டணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நேற்று இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையில் இந்தக் கூட்டணி உருவாகியுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை சமசமாஜக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன. (4-7)

## துருக்கியில் இரு...

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யும் போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக துருக்கியில் இருந்து மாவை இறக்குமதி செய்வது குறித்து இலங்கை பரிசீலித்து வருவதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி செப்ரெம்பர் நடுப்பகுதியில் ஒருதொகை கோதுமை மா துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் என்றும் அதற்கான நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது. (4-7)

## சிற்றுண்டிகளின்...

சிற்றுணவக உரிமையாளர்களே, தமது உற்பத்திகளுக்கான விலைகளை அதிகரித்துள்ளதாக சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொத்து ரொட்டி ஒன்றின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முட்டை ரொட்டி, பரோட்டா, மரக்கறி ரொட்டி மற்றும் ரோல்ஸ் உள்ளிட்ட சிற்றுணவுகளின் விலைகள் 10 முதல் 20 ரூபாவுக்கு இடைப்பட்ட அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (4-7)

## பொருளாதார...

மான கரு ஜயசூரிய இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு ஜனாதிபதியின் அதிகாரங்களை வரையறையின்றி அதிகரித்துக் கொள்வதற்கான 20ஆவது அரசியல் திருத்தச் சட்டம் முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

எனவே அதனை மாற்றியமைக்க வேண்டும் 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பாதகமான அம்சங்களை மாற்றியமைத்து, 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஊடாக உருவாக்கப்பட்ட சுயாதீன அரசியல் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். அதற்காக பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து எம்.பி.க்களும் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என தெரிவித்தார். (4-7)

## கோட்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பாரிய துன்பங்களை எதிர்கொண்டு வரும் சந்தர்ப்பத்தில், அரசு அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு முண்டியடித்துக்கொண்டு இருக்கின்றது.

எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்படும்போது நாட்டு மக்கள் நடுங்கத் தொடங்குவார்கள். மக்கள் ஏற்கனவே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் தற்போது சந்தர்ப்பவாத அரசியலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பவாத அரசியலில் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ ஒருபோதும் பங்கேற்காது.

மத்திய வருமானம் கொண்ட நாடாகவே ஆரம்பத்தில் எமது நாட்டைக் கூறினர். தற்போது எமது நாடு குறைந்த வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலிலேயே இணைக்கப்பட்டுள்ளது.

பாணின் விலை 300 ரூபாவாக அதிகரித்துள்ளது. மின்கட்டணம், நீர்க்கட்டணம் என அனைத்துக் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. மண்ணெண்ணெய்யின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது என மேலும் தெரிவித்தார். (4-7)

## அடியவர்கள்...

கள் பயமின்றி நீராடலாம்.

மேலும் ஆற்றில் உள்ள முதலைகளை பாதுகாப்பாக வெளியேற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4-7,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2022/09/04
சீட்டிழுப்பு இலக்கம் 4868
M 8 8 7 1 9 5

ஹந்தான (HANDAHANA)
சீட்டிழுப்பு திகதி 2022.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 177
கன்னி 06 24 27 55 கன்னி

மெகா பவர்
திகதி 04/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1216
E 20 43 51 72 80

கொவிசெத
திகதி 2022.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 3110
E 30 52 74 78

தன நிதானய
திகதி - 2022.09.04
சீட்டிழுப்பு இலக்கம் - 898
X 19 52 68 73

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1323
மேஷம் 5 3 3 0 6 8

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1669
சீட்டிழுப்பு திகதி: 2022.09.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,731,060/-
22 23 25 57 B

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.09.04
சீட்டிழுப்பு இல: 4004
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,611,660/-
12 57 58 64 M

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 218
சீட்டிழுப்பு திகதி 2022.09.04
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 17 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,736,280/-

ராசி
சுப்பர் ஜக்போட் ரூ. 2,760,663.80
திகதி 2022-09-04
வெற்றி வாரம் 3555
02 14 29 40 விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,298,940/-

லக்கி 25
சீட்டிழுப்பு வாரம் 1019
2022.09.04 ஞாயிற்றுக்கிழமை
S 18 26 28 57 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 258,356,887/-
தொலைபேசி 011-2 333 546-47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1843
சீட்டிழுப்பு திகதி 2022.09.04
நிறம் சிவப்பு
தினம் ஞாயிற்றுக்கிழமை
B 12 18 20 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,883,760/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976இல் பிறந்த உத்தரம் 3ம் பாதம் உள்ள ஆசிரியர் தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான வரன் தேவை.
**சைவ போசனம் விரும்பத்தக்கது.** (12678)

**075 182 4218**

---

கார்கள் குத்தகைக்கு

## தேவை

தனியார் நிறுவனத்திற்கு கார்கள் சாரதி இல்லாமல் வாடகைக்கு தேவை.

**077 839 5849** (12681)

---

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

---

# DCM யாழ்.நகர்

(வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

இன்று **A/L Day Class**

கலை, வர்த்தகப் பிரிவுகளில் தொடர்ந்து முன்னணி பெறுபேறுகளை பெற்றுவரும் DCM கல்வி நிறுவனத்தில் தங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

ஆரம்பம்: 05.09.2022 | 3 Pm

077 011 9434 (12677) நிர்வாகி

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12642)

**076 825 7716** (ஆகாஸ்)

---

## வாய்த்தர்க்கம் முற்றியதில் பெண் அடித்துக் கொலை

(கொழும்பு)

கல்கிசை, படோவிட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 52 வயதுடைய பெண் ஒருவர் அவரது வீட்டிற்கு அருகில் வைத்து ஒருவரால் தாக்கப்பட்டதில் உயிரிழந்துள்ளதாக கல்கிசை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபருக்கும் குறித்த பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் மிகையாகியதையடுத்து இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் அதன்பின்னர் சந்தேகநபர் பாதிக்கப்பட்டநப்ரை தாக்கியுதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-7)

---

## வட இந்திய காசி யாத்திரை

ஆரம்பம் 05.10.2022 நாட்கள் 12

டெல்லி, மதுரா, தாஜ்மஹால், அலகாபாத், திருவேணி சங்கமம், கயா, புத்தகயா, புத்தாலயங்கள், காசி விஸ்வநாதர், இராமேஸ்வரம், மதுரை, பிரம்மபுரிஸ்வரர் சிவன், சென்னையில் ஒருநாள் சொப்பிங்.

அனைத்துச் செலவுகளும் உட்பட விபரங்கட்கு:
கலாநிதி: T.ஸ்ரீறெங்கநாதன்
**077 768 0102** (C-4856)

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - **077 679 6623** (12675)

---

வேலையாட்கள்

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் நகைக் கடைக்கு வேலையாட்கள் தேவை.
(ஆண், பெண்) (12680)

**T.P: 077 773 0567**

---

## வீடு வாடகைக்கு

யாழ்.பிறவுண் வீதியில் வீடு வாடகைக்கு (12679)

தொடர்புகளுக்கு
**072 267 6713**

---

எதிர்காலத்திற்கான தேடல்

## வேலைவாய்ப்பு

நாட்டில் நிலவிவரும் பொருளாதார மற்றும் வேலையின்மை பிரச்சினைகளுக்காக எமது W.E.C நிறுவனமானது ஒரு சந்தர்ப்பத்தினை வழங்க உள்ளது. நாடு முழுவதும் எமது கிளைகள் ஆரம்பிக்கப்படுவதால் அதற்கான பதவிகளுக்கு துடிப்பான இளைஞர் யுவதிகள் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பதவிகளை பெற்றுக் கொள்ளலாம். **18 - 40 வயதுடைய அனைவரும் தொடர்பு கொள்ளலாம். பயிற்சியின்போதும் பயிற்சியின் பின்னரும் நிறைவான வருமானத்தைப்பெற முடியும்.**

தொடர்புகளுக்கு முந்துங்கள் (12667)

**077 174 3524, 076 653 4024**

---

## காணி விற்பனைக்கு

தாவடி வடபத்திரகாளி அம்மன் கோவிலுக்கு அருகில் நீர், மின்சார வசதியுடன் கூடிய ஒரு பரப்பு, 2 குழி உடைய வெற்றுக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. (12673)

தொடர்புகளுக்கு
**077 791 7599**

---

# IELTS

DMI COMPUTER EDUCATION
0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)

Academic or General

**IELTS Life Skills - A1**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI, British Council இன்
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
**DIPLOMA IN ENGLISH**
புதிய பிரிவு ஆரம்பம் 7/9/2022 Wed 9 am
**SPOKEN ENGLISH** நேரடி வகுப்புக்களாக

**German** - Germany, Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deutsch
**French** - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-4855)

## DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

---

1 ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி




## யோகநாதன் சர்மிளா (சோபா)

**(ஒலுமடு சர்மிளா பூட் சிற்றி உரிமையாளர்)**

**அன்பே சோபா,**
அன்புக்கும் பண்புக்கும் அடித்தளமாய் திகழ்ந்தீர்
ஆதரவு மொழி பேசி இன்முகத்துடன் வாழ்ந்தீர்
நாம் பழகிய நாட்களை கனவாய் மறப்பதா?
எம் கண்ணீரை காணிக்கையாய் சொரிவதா?
விழிகள் கரைகின்றன
வேதனைகள் நெஞ்சை முட்டுகின்றன
கண்ணீர் கடல் இன்னும் வற்றவில்லை
கண்ணீர்த் துளிகள் கலங்கிக் கிடக்கின்றன
அயலாரை அன்போடு அணைத்து
உயர்மலைபோல வாழ்ந்த – எங்கள்
குலவிளக்கே...
உம்பிரிவால் உளமுடைந்து
உயிர் உருகி சிக்கித் தவிக்கின்றோம்!
கலங்கி நிற்கின்றோம்!
ஓராண்டு என்ற நாமம் மறைந்ததே...
எம் வாழ்க்கையில் இருள் சூழ்ந்ததே...
எம் உள்ளம் கவலையில் சாய்ந்ததே...
உன் புகழ் விண்ணுலகம் மட்டுமன்றி
விண்ணையும் விஞ்சட்டும். (12640)

நிகழ்வு அன்னாரது இல்லத்தில் இன்று (05.09.2022) திங்கட்கிழமை 12 மணிக்கு நடைபெறும்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**A34, ஒலுமடு,**
**மாங்குளம், முல்லைத்தீவு.**
**077 224 2843**

உம் பிரிவால் வாடும்:
அன்புக் கணவர் யோகநாதன்
அம்மா, அப்பா, தம்பி, உறவினர்கள்

---

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 141 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12683)

**077 658 5999, 076 436 5814**
**077 874 8135**

---

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12683)

தொடர்புகளுக்கு:-
**076 755 8606, 077 911 6983**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.